பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 02 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லி மக்களின் மேம்பாட்டிற்கு பிஜேபி பாடுபடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு சந்திரகுமார் வெற்றிபெற்றார்.

3. முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உகந்த வகையில் சுங்கவரிகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. கடற்படைக்கு வலு சேர்க்கும் வகையில் ரோந்து மற்றும் பயிற்சி கப்பல்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

5. ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 264 ரன் எடுத்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>>**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கவுள்ளது.

மொத்தம் 70 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

இதில் பிஜேபி 47 தொகுதிகளில் வெற்றிபெற்று, ஒரு தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

ஆம் ஆத்மி கட்சி 22 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

காங்கிரஸ் போட்டியிட்ட அனைத்துத் தொகுதியிலும் தோல்வியடைந்தது.

புதுதில்லி தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு. **Parvesh Sahib Singh** தமக்கு எதிராக போட்டியிட்ட ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜ்ரிவாலைவிட 4 ஆயிரத்து 89 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

கல்காஜி தொகுதியில் தில்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளருமான திருமதி அதிஷி 52 ஆயிரத்து 154 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

ஜங்புரா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியா தோல்வியடைந்தார்.

பிஜேபி சார்பில், ரோஹினி தொகுதியில் திரு விஜேந்திர குப்தா, கரவால் தொகுதியில் திரு கபில் மிஸ்ரா, மூர்த்திநகர் தொகுதியில் திரு ஹரிஷ் குராணா, பிஜ்வாசன் தொகுதியில் திரு கைலாஷ் கெலாட் உள்ளிட்ட வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர்.

ஆம் ஆத்மி கட்சி சார்பில், சதர்பஜார் தொகுதியில் திரு சோம்தத், பாபர்பூர் தொகுதியில் திரு கோபால் ராய், பள்ளிமாரன் தொகுதியில் திரு இம்ரான் உசைன், சீலம்பூர் தொகுதியில் திரு சௌத்ரி சுபேர் அகமத் உள்ளிட்டோரும் வெற்றிபெற்றனர்.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவைத்தொகுதி இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் திரு. **Chandrabhanu Paswan** ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 397 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

இவர், தமக்கு எதிராக போட்டியிட்ட சமாஜ்வாதி கட்சி வேட்பாளர் திரு அஜித் பிரசாதைவிட, 61 ஆயிரத்து 710 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

தமிழகத்தின், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு சந்திரகுமார் வெற்றிபெற்றார்.

மொத்தம் பதிவான வாக்குகளில் அவர் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 709 வாக்குகள் பெற்றார்.

அவருக்கு அடுத்தப்படியாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் திருமதி சீதா லட்சுமி 24 ஆயிரத்து 151 வாக்குகள் பெற்றார்.

<<<<<>>>>>

தில்லி மக்களின் மேம்பாட்டிற்கு பிஜேபி பாடுபடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து, பிஜேபி தலைமை அலுவலகத்தில் இன்று மாலை கட்சி தொண்டர்களிடையே அவர் உரையாற்றினார்.

வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அளித்துள்ள தில்லி மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

தில்லியில் வளர்ச்சிப்பணிகள் மூலமாக மக்கள் மீது அன்பை வெளிப்படுத்துவோம் என்று பிரதமர் தெரிவித்தார்.

இதற்கிடையே, பிஜேபி-யின் தலைமைத்துவம் மற்றும் தொலைநோக்கு பார்வையில் மக்களின் நம்பிக்கையை இந்த வெற்றி பிரதிபலிப்பதாக நாகாலாந்து முதலமைச்சர் திரு **‘Neiphiu Rio ’** தெரிவித்துள்ளார்.

மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக ஆத் ஆத்மி கட்சியின் மூத்த தலைவரும், தில்லி முதலமைச்சருமான திருமதி அதிஷி தெரிவித்துள்ளார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் மாற்றத்திற்காக மக்கள் வாக்களித்துள்ளதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரிங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு குறித்து காங்கிரஸ் சுயபரிசோதனை செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உகந்த வகையில் சுங்கவரிகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

தில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் வகையில் சுங்கவரி சீர்திருத்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அறுபது ஆண்டுகள் பழமையான வருமானவரிச்சட்டத்திற்கு மாற்றாக புதிய வருமானவரி மசோதா அடுத்த வாரம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

வருமானவரிச் சட்டம் குறித்து வரி செலுத்துவோர் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

புதிய வருமானவரிச் சட்டத்தில் உள்ள பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக 22 சிறப்பு துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கடற்படைக்கு 11 ரோந்து கப்பல்கள் மற்றும் மூன்று பயிற்சி கப்பல்களை கொள்முதல் செய்வதற்காக பாரத் எலக்ட்ரானிக் நிறுவனத்துடன், பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

642 கோடி ரூபாய் மதிப்பில் இந்த கப்பல்கள் தயாரிக்கப்பட உள்ளன.

இதன்மூலம், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை உட்பட பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்புத்துறையில் சுயசார்பை அடைய வேண்டும் என்ற அரசின் முயற்சிக்கு இது பெரும் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இதுவரை 41 கோடிக்கும் மேற்பட்டவர்கள் புனித நீராடியுள்ளனர்.

மேலும், லட்சக்கணக்கான யாத்ரிகர்கள் அங்கு தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையே, பல்வேறு துறைகளை சேர்ந்த பிரபலங்கள் புனித நீராடியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, நடிகர்கள் அனுபம் கேர், ஹேமமாமாலினி, ராஜ்குமார் ராவ், கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா, குத்துச்சண்டை வீரர் விஜேந்த்ர சிங், மேரிகோம், பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் உள்ளிட்டோரும் நீராடியுள்ளனர்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை மறுநாள் புனித நீராடவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**<<<<<>>>>>**

போட்டி மற்றும் பொதுத்தேர்வில் பங்கேற்கும் மாணவர்களின் அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் தேர்வுக்கு தயாராவோம் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

மாணவர்களுடன் அவர் உரையாடவுள்ள இந்நிகழ்ச்சி, மாணவர்களுக்கு பெரும் உத்வேகம் அளிக்கும் என்று தமிழகத்தின் சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஆசிரியர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் – ஆசிரியர்கள் - 42 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

காஸா பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலிய பிணைக்கைதிகள் மூன்று பேரை அண்மையில் விடுவித்தனர்.

இதையடுத்து, இஸ்ரேல் பிடியில் இருந்த பாலஸ்தீனியர்களையும் அந்நாடு விடுவிக்க தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 264 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற விதர்பா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

---------------

தேசிய விளையாட்டுப்போட்டியின் ஆடவர் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் இமாச்சலப்பிரதேசத்தின் சவன் பர்வால் தங்கப்பதக்கம் வென்றார்.

டேராடுனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், மகாராஷ்ட்ரா வீரர் கிரண் மாத்ரே வெள்ளிப்பதக்கமும், மத்தியப்பிரதேசத்தின் வினோத் சிங் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

மகளிர் பிரிவில் மகாராஷ்ட்ராவின் சஞ்ஜீவனி ஜாதவ் தங்கப்பதக்கமும், உத்தராகண்ட் வீராங்கனைகளில் ஒருவர் வெள்ளிப்பதக்கமும், மற்றொருவர் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

இப்போட்டியின் பதக்கப்பட்டியலில், 39 தங்கம் உட்பட 66 பதக்கங்களுடன் சர்வீஸஸ் முதலிடத்திலும், 30 தங்கப்பதக்கங்கள் உட்பட 58 பதக்கங்களுடன் கர்நாடகா இரண்டாம் இடத்திலும் உள்ளன.

தமிழகம் 13 தங்கம் உட்பட 49 பதக்கங்களுடன் ஆறாவது இடத்தில் உள்ளது.

------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஹைதராபாதில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 3-1 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வென்றது.

கொல்கத்தாவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள போட்டியில் சென்னை அணி ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>